# The Baptist Tabernacle of Los Angeles

1329 South Hope Street, L.A. Civic Center

Mailing Address:
P. O. Box 15308
Los Angeles, CA 90015
Phone: (213) 744-9999
E-mail: rlhymersjr@sbcglobal.net
www.sermonsfortheworld.com
www.baptisttabernacle.com




Dr. R. L. Hymers, Jr.
Senior Pastor

Dr. Christopher L. Cagan
Associate Pastor

Dr. Kreighton L. Chan
Assistant Pastor

டிசம்பர், 2017

அன்புள்ள நண்பரே:

“எல்லா பயங்களுக்கும் எதிராக” என்பது எனது வாழ்க்கைக் கதையாக இருக்கிறது, அதை சில நாட்களுக்கு முன்பாக நான் எழுதி முடித்தேன். எனது புத்தகத்தை பாராட்டினவர்களில் ஒருவரான டாக்டர் போப் ஜோன்ஸ் III, என்னை “ஒரு தீர்க்ககரிசி” என்று அழைப்பார். டாக்டர் பில் மோன்ரோயி, BBFIயில் இரண்டுமுறை தலைவராக இருந்தவர், சொன்னார், “ஹைமர்ஸ் ஒரு நவீனகால தானியேல்.” மற்றும் டாக்டர் ஹர்பர்ட் ராலிங்ஸ், BBF குலத் தலைவர் டாக்டர் ஜான் ராலிங்ஸ், மற்றும் ராலிங்ஸ் நிருவனத்தின் தவைர், சொன்னார், “இவர் ஒரு அமெரிக்க ஒரிஜனல்! ஒரு தரிசனமுள்ளவர்! இவருடைய வாழ்க்கை ஒரு வித்தியாசத்தை உண்டாக்கும் ஒரு தீவிர உணர்ச்சியை காட்டுகிறது”. டாக்டர் நீல் வீவர், லுஸ்ஸியானா பாப்டிஸ்டு பல்கலைக்கழகத் தலைவர், சொன்னார், “ஒரு தைரியமான மனிதனை பற்றிய நவீனமான மற்றும் ஊக்கமுட்டக்கூடிய புத்தகம்.” செய்தி விமர்சகரான டாக்டர் டான் பாய்ஸ் சொன்னார், “‘எல்லா பயங்களுக்கும் எதிராக’ இதை பிரசங்கிகள் மட்டுமல்ல, ஒவ்வொருவராலும் வாசிக்கப்பட வேண்டியதாகும். ஹைமர்ஸ் ஒவ்வொருவருக்கும் ஒரு உதாரணமாக இருக்கிறார்... அவரது கதை இந்த காலகட்டத்துக்கு மருந்தாக இருக்கும் – தைரியம், ஒப்புக்கொடுத்தல், மற்றும் குணாதிசயம் நிறைந்ததாக இருக்கிறது.” டாக்டர் எடி பர்வன்டோ, இந்தோநேசியாவின் நமது மிஷனரி, சொன்னார், “நான் இந்த புத்தகத்தை உயர்வாக சிபாரிசு செய்கிறேன். தேவன் ஒரு மனிதனோடு இருக்கும்பொழுது அவன் தோல்வி அடையமுடியாது. டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் அநேக கொடிய யுத்தங்களை ஜெயித்த ஒரு வெற்றி வீரன்.”

ஜான் சாமுவேல் கேஹன் நமது அசோசியேட் போதகர் டாக்டர் கிறிஸ்டோபர் எல். கேஹன் மற்றும் அவரது மனைவி டாக்டர் ஜூடித் கேஹன் அவர்களின் குமாரன். ஜான் ஒரு சர்வதேச மினிஸ்டராக, எனது உதவியாளராக என்னோடு பணிபுரிகிறார். நமது சபையில் நிகழ்ந்த மிகவும் குறிப்பிடத்தக்க காரியங்களில் ஒன்று ஜான் சுவிசேஷத்தை பிரசங்கிக்க தன்னை சமர்ப்பித்ததாகும். அவர் இப்பொழுது பயோலா பல்கலைக்கழகத்தில் தால்போட் வேத பள்ளியில் நேரடியான “ஒரு” மாணவனாக படிக்கிறார். என் சுயசரிதைக்கு முன்னுரையை ஜான் எழுதினார். அவர் சொன்னார், “டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் கிறிஸ்துவின் காரியங்களுக்காக ஒரே மனம் உள்ளவர் மற்றும் சபையில் சூப்பர் ஸ்டார் பந்தய வீரராக, அரசியல் வித்தகராக மற்றும் வெற்றியாளராக இருக்கிறார்... தமது 77வது வயதில், புற்று நோயோடு (குணமடைபவராக) மற்றும் அதற்கான மருத்துவத்தால் ஏற்பட்ட பெலவீனங்களோடு, அதிகமான மனிதர்கள் ஓய்வு பெற்று இருப்பார்கள். ஆனால் டாக்டர் ஹைமர்ஸ் நமது சபைக்காக மற்றும் தேவனுக்காக தொடர்ந்து யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்! அவர் மேடைக்கு தாமே நகர்ந்துபோய் பிரசங்கம் செய்ததை நான் பார்த்திருக்கிறேன். முன் இரவிலே சிறிதும் தூக்கமின்மை, அவரை தாங்க முடியாத அவருடைய வலிமிகுந்த கால்கள், மற்றும் வேதனைமிக்க வயிற்று வலியோடு, மேடையின்மீது உறுதியாக

நின்றுகொண்டு, கிறிஸ்துவினால் பலப்படுத்தப்பட்டார். அவர் எப்படி பிரசங்கிப்பார்? ஒரு சிங்கத்தை போல பிரசங்கிப்பார்! அவருடைய பெலவீனமான போதனை நீங்கள் எங்கும் கேட்ட எல்லாவற்றையும்விட உயிரோட்டமுள்ளதாக இருக்கும்! அதனால்தான் அவருடைய போதனையை உலகமுழுவதிலும் உள்ள போதகர்கள் தங்கள் மேடைகளில் பிரசங்கிக்கிறார்கள்... இன்று டாக்டர் ஹைமர்ஸ் அவர்களின் போதனை வார்த்தைக்கு வார்த்தை மூலப்பிரதியிலிருந்து 36 மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது... அவருடைய போதனைகளை உலக முழுவதிலும் வல்லமைமிக்க தாக்கத்தை உண்டாக்கும் வகையில் தேவன் உபயோகப்படுத்துகிறார். சென்ற ஆண்டு 1.5 மில்லியன் மக்கள் 218 நாடுகளில் அவருடைய போதனைகளை படித்தார்கள், அவருடைய வீடியோவை இணையதளத்தில் பாரித்து பிரசங்கத்தினால் ஊக்குவிக்கப்பட்டார்கள் அந்த இணையதளமானது www.sermonsfortheworld.com... டாக்டர் ஹைமர்ஸ் அவர்களின் வாழ்க்கை சரித்திரம் உங்களை கிறிஸ்துவுக்காக வாழ ஊக்குவிக்கும் – அவர் மிகவும் நன்றாக அன்புகூருகிறார் மற்றும் மிகவும் உண்மையாக உழைக்கிறார். கடந்த சில வாரங்களில் டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் தமது பெலத்தை அதிகமாக ஆதாயமாக்கினார் என்று சொல்லுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த புற்றுநோய் திரும்ப வரக்கூடாது மற்றும் அவர் இன்னும் அநேக ஆண்டுகள் வாழவேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்."

டாக்டர் ராபர்ட் எல். சும்நர், ஒரு தேசிய அளவில் அறியப்பட்ட சுவிசேஷகர் மற்றும் "தி பிப்லிகல் எவாஞ்சலிஸ்ட்"யின் நீண்ட நாள் ஆசிரியராக இருந்தவர் சொன்னார், "எல்லா சக்திகளும் அவருக்கு விரோதமாக இருந்தாலும்... சத்தியத்துக்காக ஒரு நிலையாக நிற்க விருப்பத்தோடு இருந்தவரை நான் நேசிக்கிறேன். ராபர்ட் லெஸ்லி ஹைமர்ஸ், ஜூனியர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவர் கிறிஸ்துவின் ஊழியக்காரர்!" (***The Honor Was All Mine: Giants of the Faith Whose Paths Crossed Mine***, 2015, pp. 104, 105). என்னுடைய இந்த சுயசரிதைக்கு நீங்கள் பதிவு செய்யலாம், ***எல்லா பயத்துக்கும் எதிராக***, டாக்டர் கிறிஸ்டோபர் எல். கேஹன் அவர்களுடைய எண்ணுக்கு (323)735-3320 போன் செய்து பெற்றுக்கொள்ளலாம் 2018 வசந்த காலத்தில் இந்த புத்தகம் வெளிவந்த பிறகு.

நமது சபையில் பிரசங்கம் செய்யும்படி அழைக்கப்பட்ட மற்றொரு இளம் வாலிபர் நோவா சாங் ஆகும். அவர் தமது கல்லூரி பட்டப்படிப்பை முடித்த பிறகு செமினரியில் சேர்ந்து படிப்பார். ஜான் என்னை வெற்றிகொண்டு ஒரு போதகராக மாறின பிறகு நோவா ஜான் கேஹனுக்கு உதவியாக இருப்பார் நான் மாஜி போதகராக மாறுவேன். நோவா மற்றும் ஜான் கேஹன் இருவரும் பிரபலமான இளம் போதகர்களாக இருப்பார்கள். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நோவா இந்தோநேசியாவிலும் சீனாவிலும் பிரசங்கித்தார். ஜான் டோமினிகன் ரிப்பப்லிகிலும் இந்தியாவில் இரண்டு சுவிசேஷக இடங்களிலும் பிரசங்கித்தார். ஜானும் நோவாவும் டாக்டர் கேஹனுடன் சேர்ந்து ஆப்ரிக்காவுக்கு பிரயாணம் செய்வார்கள், அங்கே அவர்கள் உகாண்டா, கென்யா மற்றும் ரவாண்டா நாடுகளில் அடுத்த வருடம் ஜனவரியில் பிரசங்கம் செய்வார்கள்.

நாங்கள் மராத்தி (மற்றொரு இந்திய மொழியிலும்) மற்றும் கிரியோலியையும் (ஹேய்டியின் பாஷை) இந்த வருட ஆரம்பத்தில் சேர்த்துக்கொண்டோம். இவ்வாறாக நமது வார்த்தைக்கு வார்த்தை மூலபிரதியின் போதனைகள் 36 மொழிகளில் நமது வலைதளத்தில் கிடைக்கின்றன!

எனது மனைவி இல்லியானா மற்றும் நானும் எங்கள் 35வது திருமண நாளை செப்டம்பரில் கொண்டாடினோம். இல்லியானா நமது சபையில் இளம் பெண்களின் பொறுப்பாளராக இருக்கிறார். அவர்கள் மத்தியல் அவள் ஒரு அற்புதமான ஒருங்கிணைப்பு பணியை செய்கிறாள். நான் அறிந்த வகையில் இல்லியான ஒரு மிகப்பெரிய சிலுவை நாகரிக கிறிஸ்துவ பணியாளாக இருக்கிறாள், அவளுடைய அநேக இளம்பெண்கள் கிழக்கத்தியர் மற்றும் இல்லியானா குவாட்டமாலாவைச் சேர்ந்தவள்!

எனது மகன்கள் ராபர்ட் மற்றும் ஜான் வெஸ்லி இருவரும் நமது சபையில் எனக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கிறார்கள். பிப்ரவரியில் எங்கள் பேத்தி சாரா எனது மகன் ராபர்ட் மற்றும் அவனது மனைவி ஜின்னுக்கும் பிறப்பாள். அவர்களுடைய முதல் மகள் அன்னாள் இப்பொழுது இரண்டு வயது நிரம்பினவள். அவள் ஏற்கனவே

நடக்கிறாள் மற்றும் பேசுகிறாள் – அவள் ஒரு அற்புதமான பிள்ளை என்னை பார்க்கும்போதெல்லாம் எனக்கு முத்தம் கொடுக்க விரும்புகிறாள்! அவள் எனது இருதயத்தை மகிழ்ச்சியினால் பாடும்படி செய்கிறாள்!

நவம்பரில் 13 இளம் மக்களுக்கு நான் ஞானஸ்நானம் கொடுத்தேன், ஆனால் மூவர் இந்த உலகத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள் – டேனி கர்லஸ், தீமோத்தேயு சென், ஜோசப் காங், ஜூடி லீ, தாமஸ் லுவாங், யோகன்னா டுசுகாமோட்டோ, மின்ங் வூ, டாம் ஜியா, ஜெசிகா இன், அயாகோ ஜபலகா, அலிசியா ஜெகமிட்ஜின், ஜெசி ஜெகமிட்ஜின் மற்றும் பய்யாங் ஜாங் ஆவர். நீங்கள் அவர்களுடைய பெயரை சொல்லலாம் அதாவது இது ஒரு பலவிதமான குழுவான இளம் கிறிஸ்தவர்கள். லாஸ் ஏன்ஜலஸ் நகரின் மையத்தில் நமது பெரிய சபை 20 விதமான வித்தியாசமான கலாச்சாரத்தை உடைய மக்கள் கூடும் இடமாக பெற்றிருப்பதில் நாங்கள் மிகவும் பெருமை அடைகிறோம்! நவம்பர் மாதத்தில் நாம் 5 இளம் மனிதர்களை சபையின் உதவிகாரர்களாக நியமித்தோம் – ஆரோன் யான்சி, கியு டாங் லீ, ஜாக் நகன், நோவா சாங் மற்றும் ஜான் சாமுவேல் கேஹன். ஆரம்ப கால சபையின் மாதிரியை பின்பற்றி, ஜான் முந்தின உதவிகாரராக நியமிக்கப்பட்டார் அவர் சில வருடங்களில் செமினரியை முடித்து நமது சபையின் போதகராக நியமணம் பெறுவார். ஒவ்வொருவாரமும் வந்துகொண்டிருக்கும் அநேக இளம் பார்வையாளர்களுக்கு ஜான் ஏற்கனவே ஞாயிறு காலையில் பிரசங்கம் செய்து வருகிறார். அவர் ஊழியத்தில் எனது “மகன்” ஆவார். அவரது போதனைகளில் ஒன்றை எங்களது வலைதள வீடியோவில் கவனியுங்கள் (www.sermonsfortheworld.com). நான் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையிலும் மற்றும் ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் என்னால் முடிந்த அளவு நீண்ட நேரமாக தொடர்ந்து பிரசங்கிப்பேன்.

அடுத்த ஆண்டு என்னுடைய 60வது ஊழிய ஆண்டாக கொண்டாடுவோம்! நான் 60 வருடங்களாக சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறேன் என்பதை என்னால் நம்ப முடியவில்லை! எனது புற்றுநோய் இப்பொழுது குணமாகிவிட்டது. நான் 70வது ஆண்டை கொண்டாடும் வரையிலும், ஜான் மற்றும் நோவாவோடு நமது அற்புதமான சபையில் பிரசங்கம் மற்றும் ஊழியம் செய்துகொண்டிருக்கும் வகையில் அது திரும்ப வரக்கூடாது என்று ஜெபியுங்கள்! இல்லியான எனது ஊழியத்தில் பங்காளராக இருக்கிறாள். அவள் என்னோடு சேர்ந்து ஒவ்வொரு நாளும் உழைக்கிறாள், இந்த பெரிய மற்றும் பொல்லாத நகரமாகிய லாஸ் ஏன்ஜலசின் மையமான இடத்தில் நாங்கள் இளம் மக்களை உலகத்திலிருந்து ஆதாயப்படுத்துகிறோம். என்னுடைய துணையாளரான, டாக்டர் கிறிஸ்டோபர் எல். கேஹன், அவர்களின் உதவி இல்லாமல் இவையெல்லாம் ஒருபோதும் சாத்தியமில்லை. நான் இவர்களுக்கு மரியாதை செலுத்துகிறேன் டாக்டர் க்ரேங்டன் எல். சென், திருமதி எம்மா சலாசார், மற்றும் நமது உதவிகாரர்கள் மொழிபெயர்பாளர்கள், இவர்கள் இல்லையானால் இந்த ஊழியம் முடியாததாக இருக்கும்!

நாம் ஜனவரி 29ல் சீன புத்தாண்டு கொண்டாடினோம். காலை கூட்டத்தில் நோவா சாங் பிரசங்கம் செய்தார் மற்றும் டாக்டர் க்ரேங்டன் எல். சென் மாலை கூட்டத்தில் பிரசங்கம் செய்தார். நான் எனது குடும்பத்தை ஒரு விடுமுறைக்காக பூவர்டோ வலார்டா, மெக்சிகோவுக்கு ஏப்ரலில் அழைத்து சென்றேன், எனது மகன் ராபர்ட், ஜின் மற்றும் குழந்தை அன்னா, எனது மகன் வெஸ்லி, இல்லினாவின் அம்மா லிண்டா, இல்லினா மற்றும் நான் அனைவரும் சென்றோம். அது மிகவும் இரம்மியமானதாக, வெதுவெதுப்பாக மற்றும் இளைப்பாறுதல் நிறைந்ததாக இருந்தது. டாக்டர் ராபர்ட் எல். சம்னர், தமது 94வது வயதில் டிசம்பர், 2016ல், மறைந்த போது அவருடைய புத்தகங்களை எல்லாம் நமது வலைதளத்தில் விற்கும்படியாக அவர் நமக்கு விட்டு சென்றது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. டாக்டர் ராபர்ட் எல். சம்னர் அவர்களின் அநேக புத்தகங்களை வாங்க ஒரே இடம் – www.sermonsfortheworld.com. முன்பக்கத்தில் கருப்புப் பின்னணியில் உள்ள விளம்பரத்தைப் பாருங்கள். ஆகஸ்டிலே நமக்கு ஒரு எழுப்புதல் உண்டானது. நான் நாற்பது முறை பிரசங்கித்தேன், இரவுக்கு பின் இரவாக, தேவன் இறங்கிவந்து அநேகர் நம்பிக்கையோடே மாற்றப்பட்டார்கள், மற்றவர்கள் எழுப்புதல் அடைந்தார்கள். தேவன் இறங்கிவந்து நமது சபையை ஒரு புதுப்பிக்கும் நேரத்தை தந்து ஆசீர்வதித்தது இது இரண்டாவது முறையாகும்! அடுத்த வருடம் இன்னும் அதிகமான எழுப்புதலுக்காக நாம் ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்! டாக்டர் சான்னின் மகன் தீமோத்தேயு உதவிகாரராக மாறினார் மற்றும் அக்டோபர் 8 மிட் அட்டும்ன் சீன பண்டிகையில்

ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு வல்லமையுள்ள போதனையை பிரசங்கித்தார். அடுத்த வருடம் எனது சுயசரிதை வெளியிடப்பட்டபிறகு, எழுப்புதல் என்ற பொருளில் ஒரு புத்தகம் எழுத நான் திட்டமிட்டுள்ளேன். தயவுசெய்து இந்த திட்டத்திற்காக ஜெபியுங்கள்.

நாளைக்கு நன்றி செலுத்தும் நாள். எனது மனைவி 40 மக்களை எங்கள் வீட்டில் எங்களோடு இந்த கொண்டாட்டத்திற்கு அழைத்திருக்கிறாள். இந்த இரம்மியமான மற்றும் அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்து உங்கள் வீட்டில் பிரசன்னராகி இருக்க வேண்டும் என்பது எங்கள் ஜெபமாகும். தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!



தாத்தா ஹைமர்ஸ் மற்றும் அவருடைய பேத்தி, ஹன்னா!

இயேசுவின் நாமத்தினால் உங்களுடைய,



ஆர். எல். ஹைமெர்ஸ், ஜூனியர்
D.Min., Th.D., Litt.D.
பிலிப்பியர் 4:13

***நமது வலைதளத்திற்கு சென்ற ஆண்டு 120,000 போதகர்கள் சென்றார்கள் அது ஏன் என்று கண்டுபிடி. அது நூற்றுக் கணக்கான வார்த்தைக்கு வார்த்தை மூலவார்த்தைகள் அடங்கிய போதனையை 36 மொழிகளில் கொடுக்கிறது, மற்றும் 3 மொழிகளில் வீடியோ கிடைக்கிறது. நீங்கள் ஒரு பிரசங்கியாக இருந்தால், என்னை விரும்பினால், "ஒட்டி" கொண்டு மூலவார்த்தைகள் அடங்கிய போதனையை பாருங்கள். போதனைக்காக ஏறக்குறைய 1,500,000 மக்கள் (120,000 போதகர்கள் உட்பட) இந்த வருடத்தில் அவைகளிலிருந்து உதவிகளை பெற்றுக்கொண்டார்கள் அது WWW.SERMONSFORTHEWORLD.COM.***

***நமது போதனை வலைதளம் நூற்றுக் கணக்கான வார்த்தைக்கு வார்த்தை மூலவார்த்தைகள் அடங்கிய போதனையை தமிழிலும் 35 பிற மொழிகளிலும் கொடுக்கிறது அந்த வலைதளமானது WWW.SERMONSFORTHEWORLD.COM.***

***மேலும், நமது சபை வலைதளத்தை பாருங்கள் WWW.BAPTISTTABERNACLE.COM.***






திருமதி ஆரிடான்டோ, வெஸ்லி, திருமதி ஹைமர்ஸ், ராபர்ட் லெஸ்லி குழந்தை அன்னாளை பிடித்துக்கொண்டு, ஜின் ஹைமர்ஸ் (ராபர்ட்ஸ் மனைவி) ஹோட்டலில் டாக்டர் ஹைமர்ஸ்சுடன் பூவர்டோ வலார்டா, மெக்சிகோ.

டாக்டர் ஹைமர்ஸ் ஆச்சரியத்தோடு பார்க்கிறார் எண் 76 போடப்பட்ட பிறந்த நாள் கேக் உடன்!



டாக்டர் ஹைமர்ஸ் செல்வி பாய்யாங் ஷாங்க்கு ஞானஸ்நானம் கொடுக்கிறார்.



டாக்டர் ஹைமர்ஸ் ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஸ்கோபீல்டு வேதாகமம் கொடுக்கிறார்.

***நமது போதனை வலைதளம் நூற்றுக் கணக்கான வார்த்தைக்கு வார்த்தை மூலவார்த்தைகள் அடங்கிய போதனையை தமிழிலும் 35 பிற மொழிகளிலும் கொடுக்கிறது அந்த வலைதளமானது WWW.SERMONSFORTHEWORLD.COM.***

***மேலும், நமது சபை வலைதளத்தை பாருங்கள் WWW.BAPTISTTABERNACLE.COM.***



அன்னாள் ஹைமர்ஸ் தனது தாத்தா உடன், மற்றும் ரஃபேல் கூயிலர், குவாட்டமாலாவிலிருந்து!



புதிதாக நியமிக்கப்பட்ட உதவிக்காரர்கள் (முன் வரிசை) புதிதாக ஞானஸ்நானம் பெற்ற நபர்கள் (பின் வரிசை).




திருமதி ஹைமர்ஸ் பிறந்த நாள். டாக்டர் ஹைமர்ஸ் குழந்தை ஹன்னாவுக்கு பிறந்தநாள் கேக் ஊட்டுகிறார்!



டாக்டர் மற்றும் திருமதி ஹைமர்ஸ்.

***நமது போதனை வலைதளம் நூற்றுக் கணக்கான வார்த்தைக்கு வார்த்தை மூலவார்த்தைகள் அடங்கிய போதனையை தமிழிலும் 35 பிற மொழிகளிலும் கொடுக்கிறது அந்த வலைதளமானது WWW.SERMONSFORTHEWORLD.COM.***

***மேலும், நமது சபை வலைதளத்தை பாருங்கள் WWW.BAPTISTTABERNACLE.COM.***





டாக்டர் ஹைமர்ஸ் ஜான் சாமுவேல் கேஹன் உடன் மற்றும் அவரது நிச்சயிக்கப்பட்ட பெண் ஜூலி சிவிலே.

திரு. வின்ஸ்டன் சாங், நமது சீன மொழிபெயர்ப்பாளர் (மையம்). ஜான் சாமுவேல் கேஹன் (இடது) மற்றும் நோவா சாங் (வலது).





ஜான் சாமுவேல் கேஹன் டோமினிசன் ரிபப்லிக்கில் பிரசங்கம் செய்கிறார், அவருடைய அப்பா, டாக்டர் கேஹன்வுடன், ஸ்பானிஷில் மொழி பெயர்க்கிறார்.

ஜான் சாமுவேல் கேஹன் இந்தியாவில் பிரசங்கம் செய்கிறார்.

***நமது போதனை வலைதளம் நூற்றுக் கணக்கான வார்த்தைக்கு வார்த்தை மூலவார்த்தைகள் அடங்கிய போதனையை தமிழிலும் 35 பிற மொழிகளிலும் கொடுக்கிறது அந்த வலைதளமானது WWW.SERMONSFORTHEWORLD.COM.***

***மேலும், நமது சபை வலைதளத்தை பாருங்கள் WWW.BAPTISTTABERNACLE.COM.***